ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2483/04 - 2026 අප්‍රේල් මස 07 වැනි මස අඟහරුවාදා - 2026.04.07

*2483/04 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1)(அ) என்னும் பிரிவின் கீழ் பேருவளை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

பேருவளை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி அனுமதிபெறாது மூன்றுமாத காலத்திற்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், பேருவளை நகர சபையின் இலக்கம் 03- சீனன்கோட்டை வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு. மொஹமட் இஷ்ஹாக் என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக. உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்குழுவை சேர்ந்தவருமான பேருவளை நகர சபையின் இலக்கம் 03- சீனன்கோட்டை வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழுத் தலைவரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. அஹமட் இல்மான் அஹமட் இஷ்கார் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

பேருவளை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வன்னகுவத்த வடுகே காலிந்திர ஜயவீர பிரனாந்து ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. அஹமட் இல்மான் அஹமட் இஷ்கார் என்பவர் பேருவளை நகர சபையின் இலக்கம் 03- சீனன்கோட்டை வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**காலிந்திர ஜயவீர பிரனாந்து,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
பேருவளை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
களுத்துறை,
2026, ஏப்பிறல் 07.

EOG 04 - 0043